REGD. No. M. 4042

# திராவிடநாடு

விலை
அணா
2.
சிலோன்
15 சதம்

மலர் 10 || 23—3—52 || இதழ் 38

"தெய்வ நம்பிக்கையை நீங்
ள் ஸ்திரமாக்கிக் கொள்ள
வண்டும்"

ர், யாருக்குச் சொல்லியது
ியுமோ இது! 'சதா சர்வகால
தபாபரன் பூஜையில ஈடுபட்
க்கேன்' என்று, குழைவு நெளி
டு கூறுவரே, நமது கோயில்
க்கள்மார், அவர்களுக்கு, அறி
தந்திருக்கிறார் 'ஸ்திரமாக்கிக்
ள்ளுங்கள்' — என்று. ஆச்சரி
படுவீர்கள்! 'ஆறுகாலப் பூஜை
அர்த்தஜாத்திரி நைவேத்யமும்
லங்காரமும், செய்வித்து, கர்ப்பக்
ரகத்துக்குள்ளே இருப்பவருக்கா
இந்தப் போதனை—அவர்களுக்
ப்படி தெய்வ நம்பிக்கை குறை
—அவசியமென்னவந்தது 'ஸ்தி
க்கிக் கொள்ளுங்கள்' என்று
ரிவிக்க?' என்று எண்ணுவீர்
. யாரோ ஒரு விதண்
வாதியல்ல, 'ஸ்திர
க்கி'க் கொள்ளச்
ன்னவர். அவர்
ளே சேர்ந்தவர்!
க்கென்ன தெரியும்,
ர்ச்சகர்களுக்கிருக்கும்
தியும் சிரத்தையும்.
ம்தான் அண்டவும்
டியாது — அறியவும்
டியாதே! கோயில்
ர்ச்சகர்கள் தெய்வ நம்
கையை ஸ்திரமாக்கிக்
காள்ள வேண்டும்'
ன்று தெரிவித்தவர்,
மளவா, என்று அந்த
டாரத்தால் அழைக்
படும் பேறு பெற்
ர்

## 'நம்பிக்கையில்லை!'

[ அண்ணல் ]

கடந்த 17-ந் தேதி சென்னை லிங்கிச்செட்டித்தெருவில் அர்ச்சகர்கள் மாநாடு ஒன்று நடைபெற்றதாம். தஞ்சை கணேச குருக்கள் வரவேற்பு உபன்யாசம் செய்ய, சேலம் சிவசுப்பிரமணிய குருக்கள் தலைமை தாங்க, திருப்பதி பார்த்தசாரதி பட்டாச்சாரியார், பேசும்போது இதைத் தெரிவித்திருக்கிறார். அந்த மகாநாட்டில் கூடியோர், பொதுஜனங்களல்ல — அவர்கள் அனுமதிக்கவா,படுவர் அதுவும் அர்ச்சகர்கள் மாநாட்டில்? ஆகவே, 'அவர்களுக்குள்'ளாகவே இந்த 'போதனை' நடைபெற்றிருக்கிறது!

"ஸ்திரமாக வேண்டுமாம்!" கூறுகிறார், அவர். 'ஏன், போலியாக இருக்கிறதோ? என்று கேட்பீர்கள், நீங்கள் — நமக்கென்ன தெரியும்? கூறுகிறார் அவர்! பாம்பின்கால் பாம்பு அறியும்!!

கோயில் விஷயங்களில் சர்க்கார் குறுக்கிடுவது கூடாதெனவும், அர்ச்சனை டிக்கட் விற்பனை முறையால் அர்ச்சகர்கள் நலம்பெறமுடியவில்லையென்றும், வலியுறுத்திப் பேசப்பட்டதாம்—அம்மாநாட்டில். 'வேறென்ன பேசுவர்! கழுகுக் கூட்டத்தில் கவரிமான் பேச்சா எழும்பும்!!

* * *

'அவர்கள் கூடிப்பேசினால் என்னவாம்? ஏதோ அவர்களுக்குள் கலந்துபேசிக் கொண்டார்கள். வயலிலே உழைப்பவன் கூலி அதிகம் கேட்கலையோ! ஆலையிலே இருப்பவன் அழவில்லையோ, சம்பளம் போதவில்லை யென்று! அதைப் போலத்தான் இதுவும். அர்ச்சகாளுக்கு மட்டும் பணம் என்ன கர்ப்பகிருகம் வெடித்து சலகலவென உதிருகிறதோ — அவர்கள் தொழில் அது — அதை நடத்தி, அதற்கான ஊதியத்தைப் பெறுவது பற்றிப் பேசினால் — உனக்கென்னப்பா?" என்று கோபிக்கலாம், கோயில் கூடாரத்தோர். 'குடும்புத் தனத்தைப்பார்!' என்று

## தி. மு. க. பொதுக்குழு

அன்புடையீர்,

வணக்கம். மாநில மாநாடு முடிந்து, தி. மு. க. வின் முதல் பொதுக்குழுக் கூட்டம் **6–4–52** ஞாயிறு காலை **10-**மணிக்கு ஈரோடு எஸ். ஆர். சந்தானம் மண்டியில் நடைபெறும். அவ்வமயம் கழக சம்மந்தமான வேலைகள் குறித்தும், கழக சட்டதிட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கான முறைகள் பற்றியும், மாநில மாநாட்டுக் கணக்கு வகை பற்றியும் கழக தினத்தாள் குறித்தும் கலந்து பேசப்படும். பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

அன்பன்,
அண்ணாதுரை

ராம், பக்திமான்கள்.

அர்ச்சனை வருமானம்பற்றியோ அவர்கள் மாநாடுபற்றியோ, கவலையும் கருத்துமில்லை—நமக்கு. ஆனால்,

'கடவுளின் சீடர்கள்!', 'கடவுளுக்குப் பூஜை செய்யும் புண்ய மூர்த்திகள்!' 'கடவுளைத் தொட்டுப் பூஜிக்கும் புண்யாத்மாக்கள்' என்று போற்றப்படும் அவர்களைப் பற்றிய அம் மாநாட்டில், 'கடவுள் நம்பிக்கை' பற்றிய பிரச்சினை ஏன் வந்தது என யோசித்தோம் — ஒருவேளை அவர்களும் 'நாஸ்திகப் பட்டியலில்' இடம் பெறுகிறார்களோ எனும் ஐயத்தால்! ஏனெனில், மதாச்சாரத்தின் தூதுவர்களெனக் கருதப்படுவோர் மத்தியில், இந்தப் போதனை ஏன் செய்யப்பட வேண்டும்? 'நன்றாக படி, தம்பி!' என்றால், 'தம்பி படிக்கவில்லை' என்றுதானே அர்த்தம். ஆகவேதான், 'ஏன் இந்தப் பிரச்சினை' எழும்பிற்று—என்று எண்ணினோம். அதிலும் இந்தப் போதனையைப் புரிந்திருப்பவர் முதலியாரோ நாய்க்கரோ சைவப்பிள்ளையோ அல்லவே — பட்டாச்சாரியாராயிற்றே! விஷயம் புரியும் நிலையிலுள்ள குலமல்லவா! ஆகவே, சிறிது சிந்தை செலுத்த வேண்டியவரானோம்.

*    *    *

"லோகம் கெட்டுண்டே போறது—காலா காலத்திலே மழை பெய்யறதில்லே—நாடு க்ஷீணதசைக்குப்போறது. கலிமுத்திட்டுது—நாஸ்தீகா பரவிட்டா! நாசம் விளையுது!!" என்று அக்கிரகாரத்து வீதிகளிலே, நம்மைப்பற்றிப்பேசிக் கொள்கிறார்களல்லவா — அந்த ஞாபகம் வந்தது நமக்கு.

குருக்கள்மாருக்கு கடவுள் நம்பிக்கைஸ்திரமாக இல்லை—பட்டாசாரியார் சொல்கிறார், இப்படி. அவர்கள், கடவுள் அருகிலிருந்து, பூஜிக்கும் பேறுபெற்றவர்கள். அக்காரவடிசலும், ஆர்த்தியும், அர்ச்சனைக்காசும் அவர்களுக்குத்தான் சொந்தம். அந்தகையோரிடத்தில், தெய்வநம்பிக்கை குறைகிறதாமே! சொல்லுகிறாரே — பட்டாச்சாரியார்!

அர்ச்சகர்களென்றால் சாமான்யரா? கடவுளுக்குப் பக்கத்திலிருக்கும் பிரம்ம குலத்தவராயிற்றே — அவரா, நாஸ்தீகர்களாகின்றனர்! என்ன இது வேடிக்கை — கூறுபவரோ பட்டாசாரியார் — கூற்றை நம்பாமலும் இருக்க முடியவில்லை! என்னவிந்தை இது—எனத் திகைத்தோம் — இந்தச் செய்தியைத் தெரிவித்த 'தினமணி' இதழின் அதே பக்கத்தில், மற்றோர் செய்தி கண்ணில் பட்டது—அதுவும் அர்ச்சகர் சம்பந்தப் பட்டதால், கவனித்தோம். ஆச்சரியம் அலைகடலாயிற்று! திகைப்பு மலைபோல வளர்ந்தது!!

திருப்பதி கோர்ட்டிலே, நடைபெறும் வழக்கு, ஒன்றுபற்றிய செய்தி அது. வாதி—ஒருஅர்ச்சகர். பிரதிவாதி பக்தர். பக்தர், அர்ச்சகர்மீது வழக்குப் போட்டிருக்கிறார். வேடிக்கையான வழக்கு அது! விபரத்தை வழக்குத் தொடர் பக்திமானே, கூறுகிறார்-கே கள்:—

"என்பெயர் கேசவராவ். நா என்மனைவியும் திருமலை திருப்ப திருச்சானூருக்கு யாத்திரைய வந்தோம். பிரார்த்தனை செலுத் வதற்காகவே வந்தோம் திருச் னூர் அலர்மேல் மங்கைத்தாய கோவிலுக்கு. பிரார்த்தனை ஒரு புடவை, ஒரு ரவிக்கை, ரூ ஆகியவைகளை வைத்திருந்தோ மங்கண்ணு எனும் டவாலி அங் திருச்சானூருக்கு அழைத்து கொண்டுபோனார். ஒருசிறிய கோ விலுள் சென்றோம். அந்தக்கோயி லிருந்த அர்ச்சகர் ராஜாராவ் எ கள வஸ்துக்களை வாங்கிக் கொண் ஹாரத்தி கொடுத்தார்"

சரி. இதிலென்ன வழக்கு வழக்கமாகத்தானே நடந்திருக் றது—பக்தர் போனார் அர்ச்சக டம் காணிக்கை தந்தார்,— ஆரத் நடைபெற்றது என்பீர்கள்! ஆ ரசமான கட்டம் எது தெரியுமோ இனிமேல்தான்.

பக்தர் போனது ஆரத் நடைபெற்றதெல்லாம் உண்ம தான். ஆனால் பக்தர்போகவிரும்பி கோயிலல்ல, அது! பக்தர்காணிக்கை செலுத்தவேண்டிய அம்பாள் அலர்மேல் மங்கைத்தாயா காணிக்கை செலுத்தப்பட்டதே வேறொரு கோயிலில்! தாங்குவார பக்தர் இதை? அலர்மேல் மங்கை தாயாருக்காக வாங்கிய புடவை யும் ரவிக்கையையும்-ஏதோஒருமூ யிலிருக்கும் அம்பாளுக்கா, கொடு கச்சம்மதிப்பார்? 'எனக்கு செலுத் வேண்டியதை எவளுக்கோ கொடு தாயா—' என்று, அலர்மே மங்கை; சீறமாட்டாரோ! ஆகவே தகவல் அறிந்ததும், போலீசா டம் புகார் செய்திருக்கிறார், ராஜ ராவ் மீதும், 'இதுதான் அலர்மே மங்கை கோயில் என்று அழைத் துச் சென்ற, மங்கண்ணுமீதும் போலீசார் இரண்டு அர்ச் கர்களையும் கூண்டிலேற்றியிருக் றார்கள். புகார் செய்த பக்தரே 'நீதிபதி அவர்களே' என்று கிற றார்—'மங்கைத்தாயார் கூலிகொடு பார் இந்தப் பாவிகளுக்கு' என் போய்விடவில்லை! அர்ச்சகரோ, ஆ துக்காரியை எண்ணி, புதுப்புடவை

## 'சூழ்நிலை'—மறுப்பு

சென்னை தொண்டைமண்டலப் பள்ளியில் நான் பேசிய சொற்பொழிவு சிந்தாமல் சிதையாமல் 'சூழ்நிலை' என்ற பெயருடன் புத்தகவடிவமாக வெளியிட்டிருப்பதாக ஒரு அறிவிப்பும் மதிப்புரையும் 13—3—52 மாலைமணி இதழில் வெளிவரக் கண்டேன்! 'சூழ்நிலை' என்ற தலைப்பிலே நான் பேசவுமில்லை, அப்பெயருடன் வெளிவரும் புத்தகம் என் சம்மதம் பெற்றோ, அனுமதியுடனோ வெளிவருவதுமல்ல. 'மதிப்புரை' மாலைமணியில் வெளிவந்த பிறகும், என் பெயரால் வெளியிடப்பட்டுள்ள அந்தப் புத்தகத்தை நான் காணவுமில்லை, எனவே, அந்தப் புத்தகத்தில் என் கருத்துகள் இருக்குமென்றோ, பொதுமக்களுக்கு என் கருத்துக்களை அறிவிக்கும்நல்லெண்ணத்துடன் வெளியிடுவதென்றோ நான் நம்புவதற்கில்லை. இம்மாதிரியாக வெளியீடுகள் புறப்படுவது உண்மையில் எனக்கும் பொதுமக்களுக்கும் இழைக்கப்படும் முதல்தரமான துரோகச் செயலென்றே கூறுவேன், இவ்விதமான முயற்சியை என்னைப்போலவே பொதுமக்களும் கண்டிக்கத் தவறக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்,

**அண்ணாதுரை.**

க்கையை நினைத்து நினைத்து, தை இழக்கும்படி நேர்ந்ததை துக்குள்ளே எண்ணி 'ஐயோ வனே!' என்று கூண்டிலே நிற் ருர்!!

★

கடவுள் நம்பிக்கை இல்லை! — ட்டாச்சாரியார் தந்த பிரசங்கச் தறல் இது. கடவுளை ஏமாற்றி மாசடி செய்தார் அர்ச்சகர்!—கண் முன்னே நடைபெறுகிறதுவழக்கு. ந்த இரண்டைக் கண்டதும், கட ள் இவர்கள் கையில் அகப்பட்டு அவஸ்தைப்படுவது கவனத்துக்கு ந்தது. 'கோவிந்தா! கோவிந்தா!!' ன வீதியிலே அலறி, படியேறி, கவானின் பாரியைக்கு, பக்தர் காண்டு சென்ற புடவையும் ரவிக் கயுமே—பகற்கொள்ளை அடிக்கப் டுகிறது! பாபம்—எவ்வளவுவினை ம் பாருங்கள் — கொள்ளையடிப்ப ம் திருடனல்ல; அர்ச்சகர்!! பக் ர்கள் செலுத்தும் இந்தக் காணிக் கைகள் இன்னும் எவ்விதமெல்லாம், றிபோகிறதாம், தெரியுமா? அதே தினமணி' இதழிலே, மேலே தந்த செய்திக்கு தலைப்பிலிருக்கிறது. மற் ருர் செய்தி.

"திருமலை ஏழுமலையானுக்கு பக் ர்கள் அனுப்பிய சில மணியார்டர் ளை கையாடியதாக திருமலை திருப் தி தேவஸ்தான டிரஷரி அட் டெண்டர்மீது போலீசார் வழக்கு தொடர்ந்திருக்கிருர்கள்."

பக்தர்கள் காணிக்கை, பரந்தாம னுக்குப்போகிறது இவ்விதம்! இந்த வழக்கிற்குக் காரணமானவரோ — சாதாரணமானவரல்ல — ஏழுமலை யானின் பொக்கிஷ இலாகாவைச் சேர்ந்தவர்! டிரஷரி அடெண்டர்!

பட்டாச்சாரியார் கூறுவதுபோல கடவுள் நம்பிக்கை ஸ்திரமாகஇருந் திருந்தால், கடவுளுக்கு வந்த காணிக்கை இப்படியா களவுபோ கும்! போகாது! போகாது!!—'கட வுள் என்ன செய்யமுடியும்?'' என்ற அலட்சியம்தான், இதுபோன்ற நட வடிக்கைகளை தொடர்ந்து செய்து வரத்தூண்டியிருககிறது. இந்தக் காரியங்களைச் செய்தவர்கள் அர்ச்ச கர்கள் — மற்றோரைப் பார்த்து சொர்ப்பக்கிருகத்துக்கு வாராதே த— ண்ணைப் பொசுக்கிடுவார்' என்று றருக்கு கடவுள் மகிமைபற்றிப் பவர்கள்! அவர்களுக்கு பக்தி யில்லை என்கிருர்—பட்டாச்சாரியார்! 'உண்மைதான்' என்கிருர்கள், செய்கைமூலம், அர்ச்சகர்கள் 'பக்தி யில்லாததுமட்டுமல்ல பயமுமில்லை' என்று, அவர்தம் செயல்கள்மூலம், விளக்கியிருக்கின்றனர்.

கடவுள் சக்தியை, அர்ச்சகர்களே சந்தேகிக்கின்றனர்—அல்ல! அல்ல!! —நம்பவில்லை! ஆனால் நம்மனோரை மட்டும் 'காணிக்கை செலுத்த,வா' 'பிரார்த்தனை செய்' என்று அழைக் கின்றனர். கடவுளின் தூதர்கள் அர்ச்சகர்கள்! அவர்களின்நிலை இப் படியிருக்கிறது — நம்மவரோ இன் னும் வீதிகளிலே உருண்டு 'ஏழு மலையானுக்கு' காணிக்கைகள் சேக ரிக்கின்றனர்—பரலோகஆசையோடு. பக்தர்கள் துரோகம் — தூதர்கள் கொள்ளை, இதற்கிடையிலே பரந் தாமன்! கோயில்கள் கொள்ளைக் கூட்டங்களென்றால் கோபிப்பரே— பக்தர் குழாம். பட்டாச்சாரியார் தெரிவிக்கிருர்—பத்திரிகை தகவல் கூறுகிறது இப்போது! என்ன சொல்வரோ இதற்கு, எம்பிரான் சீடர்கள்!!

✲

# ஆரவல்லி, அருகே!

★

இருதயம் பாலைவனமாகிறதாம், —கவலையோடு தெரிவித்திருக்கிருர்! மத்திய சர்க்காரின் முக்கிய நீர்ப்பா சன அதிகாரியான கோஸ்லா. 'பாரதமாதா'வின் இருதயம் பாலை வனமாகிறதாம்! இந்திய உபகண் டத்தின் நடுவிலமைந்துள்ள, ராஜஸ் தான், மணற் காடாகி வருகிறதாம்! இந்தக்கவலை, வடநாட்டு மக்க ளுக்கு அதிகரித்திருப்பதாகவும், உலகநாடுகளின் கவனத்தைக் கவர்ந் திருப்பதாகவும், கோஸ்லா கூறு கிருர்.

சிறுசிறு ரஜபுதன சமஸ்தானங் களைக் கொண்டது, இந்த ராஜஸ் தான். இதன் வடபகுதியிலிருக்கும் தார் பாலைவனம், வரவர, அதி கரித்து வரும் அறிகுறி, ஒவ்வொரு ஆண்டும் விரிகிறதாம். இந்த வேத னையை வெளியிட்டிருக்கிருர். கோஸ்லா.

ஆரவல்லி குன்றுகளால் அணைக் கப்படும், இந்த பூமிக்காக, ஆண்டு தோறும் ரூ. 4-லட்சம் செலவிடப் பட்டு வருகிறது — டில்லி சர்க்கா

## சி. என். ஏ.

சி. என். ஏ. உடல்நிலை, நலம் அடைந்துவருகிறது. இப்போது நெஞ்சுவலி குறைந்திருக்கிறது. (மருந்து சாப்பிட்டுக்கொண்டு வருகிருர்.) இன்னும் குறைந்தது ஒரு மாத ஓய்வு தேவை என்று டாக்டர் கூறியிருக்கிருர்.

ரால். எனினும், பாலைவனம் வளர் கிறதாம்!

இந்தக் கேட்டைத் தீர்க்க, ஐக் கிய நாடுகளின் சார்பில், ஒரு ஆலோசனையாளர் குழு நியமிக்கப் பட்டிருப்பதாகவும், அது இந்தியா வுக்கு வந்து இந்தச் சிக்கலைத் தீர்க் கும் திட்டத்தை வகுக்கும் என் றும், அவர் தெரிவித்திருக்கிருர்.

நாடு—மணலாகும் இந்த ஆபத் தைத் தவிர்க்கும் வழிவகைகளைக் காணுவதற்காக, மத்திய சர்க்கார், ஆராய்ச்சி நிலையமொன்றை நிர்மா ணிக்கப் போகிருர்களாம்—ஜோதி புரியில்.

இந்திய உபகண்டத்தின் மொத் தப் பரப்பில் 11—சதவிகிதம் கொண் டது, ராஜஸ்தானும்; ஆனால் 5- சதவிகிதம் மக்கள் தொகையே இருக்கின்றனர். இந்தியாவிலேயே குறைந்த மழையுள்ள பிரதேசமும், இதுதான். பஞ்சமும் பட்டினியும், அடிக்கடி அல்ல — எப்போதும் —இங்கு வட்டமிட்டு வருகின்றன.

மைகா, துத்தநாகம் முதலிய பல உலோகப் பொருள்கள் இங்கே, கிடைக்கின்றன. பெருத்த அள வில் உப்பு, இங்கே கிடைக்கிறது.

பாலைவன வளர்ச்சி தடைபடா விட்டால், விளைவு வேதனையாகிவிடு மென—அஞ்சுகின்றனர், வடநாட்டு மக்கள். அதன் காரணமாகவே, ஆர் வத்தோடு, பல முயற்சிகளில் ஈடுபட் டிருக்கிறது, டில்லி.

## வேலை நிறுத்தம்

டால்மியா புரம் சிமெண்ட் கம் பெனியின் பிப்ராக்டரி பிளாண்டில் 120 தொழிலாளர்கள் மார்ச் 14ந் தேதி, உள்ளிருந்து வேலைநிறுத்தம் செய்தனர். தமக்குத்தரப்படும் சம் பளம் போதாதென்பதே தொழி லாளரின் [illegible]

# கோபாலர்

# படம் பிடிக்கிருர்!

"முக்கியமான திட்டங்கள் பல போட்டிருந்தோம் — ஆனுல் அதை நிறைவேற்ற பணமில்லாது தவித்தோம். மத்திய சர்க்காரைப் பார்த்துக்கேட்டோம். தேவையான அளவுக்குத்தான் நிதிஉதவி கோரினேம்; அதிகமாக அல்ல. ஆனுல் மத்திய சர்க்கார் தரவில்லை, இம்மாகாணத்துக்கு"

* * *

முன்னுள் நிதியமைச்சர் கோபால ரெட்டியார், சட்டசபை 'பட்ஜட்' விவாதத்தின் போது, தகவலைத் தெரிவித்திருக்கிருர். கடந்த ஆறு ஆண்டுகாலத்தில் இதெதைச் செய்யத்திட்டமிட்டிருந்தோம்— ஆனுல் பணமில்லை கையில் — மத்திய சர்க்காரும் மறுத்துவிட்டது, மனமிரங்காமல் என்று விளக்கி இருக்கிருர். சட்டசபையின் கடைசிக் கூட்டத்தில் என்றல்ல, பலப்பல முறை, மத்தியசர்க்காரின் 'மாற்ருந்தாய்' போக்கு குறித்து, கோபாலர் பேசியிருக்கிருர்—கூட்டங்களிலும் கல்லூரிகளிலும். நிதியமைச்சர் அவர்! ஆகவே, நிதியை டில்லிக்குத் தந்துவிட்டு, உதவி கேட்டால் 'இல்லை, என மறுத்த டில்லி பீடத்திடம் படாதபாடு பட்டிருக்கிருர்! எனவேதான், இழிவு தாங்கமுடியாது இவ்வண்ணம் பேசிவந்தார், எனக் கருதினேம். ஏனைய அமைச்சர்களைவிட, டில்லியின் ஓரவஞ்சனை குறித்து, வருத்தமும் கண்டனமும் அதிகமாகத் தெரிவித்தவர் — நிதி மந்திரிதான். எங்கு போனுலும் சொன்னுர்! இதைச் சொல்வதற்காகவே பல இடங்களுக்குப் போனுர்!—ஆனுல் அப்போதும், டில்லி, இரங்கவில்லை. சென்னையைத் தவிக்கவிட்டு, வேடிக்கை பார்த்திருக்கிறது. சென்னையில் ஆட்சி செலுத்திபோரும் காங்கிரசார் தான்—டில்லியில் இருப்போரும் காங்கிரசார் தான். ஆனுல் சென்னையின் வேண்டு [illegible] கரித்திருக்கிருர்கள். காரணமென்ன இதற்கு? மாகாண சர்க்கார் உதவி கோரிய திட்டங்கள்—முக்கியமானவையாம்! கோபாலர் தெரிவிக்கிருர்' மக்களின் நல்வாழ்வைப் பெருக்கும் அணைக்கட்டுகளும், நீர்ப்பாசன வசதிகளும் செய்யப் பணம் கேட்டனராம். ஆனுல் டில்லி, மறுத்திருக்கிறது! மக்கள் நலன் கோரி—மாகாண சர்க்கார் பணம் கேட்டனர். டில்லி, மறுத்தது.

"பல திட்டங்களைப் போட்டு, பணம் கேட்டு பரபரப்போடு விழித்துக்கொண்டிருந்தோம். கவலையோடு 'என்ன பதில் வருமோ எனக்காத்து கிடந்தோம்—எத்தனையோ தடவைகள்" இவ்விதம், விளக்கம் தருகிருர், அவர். ஒரு முறையல்ல இருமுறையல்ல; எத்தனையோ தடவைகளாம்! மூக்கறுத்ததாம் மத்திய சர்க்கார்! 'முகாரி, பாடுகிருர், முன்னுள் நிதி அமைச்சர்!

எத்தனையோ தடவைகள், இவ்விதம் டில்லி மறுத்தது மட்டுமல்ல; அடிக்கடி எச்சரிக்கை செய்துகொண்டுமிருந்ததாம். இப்படிப் பணம் கேட்காதீர்கள்—என்றல்ல; இவ்விதம் திட்டங்களைப் போடாதீர்கள். என்று மாகாண சர்க்கார் மக்களின் நல்வாழ்வுக்கான மூலதனத் திட்டங்களில் முயற்சி செலுத்துவதை — கண்டித்திருக்கிருர்கள். பணமும் இல்லை! பரிதாபமும் இல்லை, நம்மீது!!

என் இது?—அதற்கும் சிறு குறிப்பு தந்துள்ளார். முன்னுள் அமைச்சர் மத்திய சர்க்கார் கட்டளையை மீறி, இவர்கள், சில காரியங்கள் செய்தார்களாம். அதனுல், இவ்விதம் நேர்ந்ததாம். மத்திய சர்க்கார் மனமொப்பாது இவர்கள் செய்தது — மதுவிலக்கு இன்னும் சில திட்டங்கள். மதுவிலக்கு காங்கிரசின் தேர்தல்திட்டம்! அதை நிறைவேற்றுவது டில்லிக்கு பிடிக்கவில்லை. அதோடு, இன்னும் சில திட்டங்கள் டில்லியின் [illegible]

உத்திரவோடு செய்யவில்லைய
அந்தத் திட்டங்கள் எவையென்
கோபாலரே கூறுகிருர் — அணை
கட்டு நீர்ப்பாசனத் திட்டங்
இந்தத் திட்டங்கள், டில்லி
கேட்டுப்போடவில்லையாம். அத
எச்சரிக்கை—பணமில்லை என்ற
விரிப்பு—எரிச்சல் மொழி!

ஏனிந்த எச்சரிக்கையும் எரி
லும் வந்தன? கோபாலரே தெரி
கிருர், மாகாண சர்க்கார், மத்
சர்க்காரின் அனுமதியின்றி, இத்
டங்களை மேற்கொண்டனரா
With out their Sanction! அ
களின் அனுமதியில்லாமல்!
படிச் சகிக்கும் டில்லி? ஆக
பண உதவி செய்ய மறுத்தி
கிறது—நம்மை பரிதாபப்படச்
திருக்கிறது.

* * *

"மாகாண சர்க்கார்களுக்கு
உதவவில்லை?"

## 'ஒரு அதிசயம்!

"பதினென்றில் ஒரு பங்கு
பளம் போதும்" என்று, தெரி
திருக்கிருர், மேற்கு வங்க கவர்
தனக்குரிய மாதச்சம்பளம்
5,500-ல் ரூ. 500 மட்டும் போ
என்றும் அறிவித்திருக்கிருர் அ
'மீதப்பணம் — சர்க்கார் எடுத்
கொள்ளட்டும்' என்றும், கூறி
ளார். இந்தச் செய்தி, பலருக்
ஆச்சரியத்தையே தரும். கொ
லாபம், அடிக்கவே அரசாங்கத்
குந்தியிருக்கிறேம், என்று
கோடு ஆயிரக்கணக்கில் சம்பள
பல்லாயிரக் கணக்கில் அலவன்
பெற்றுத் திரியும் காங்கிரஸ் ஆ
அதிகாரிகளின் அக்கிரமங்
கண்ணுறப் பார்க்கின்ற நேரத்தி
மேற்கு வங்க கவர்னர் முகர்ஜி
செய்கை, எல்லோரையும் வி
பிலே ஆழ்த்தும்.

கவர்னராகவும் மந்திரிகளா
யிருக்கும் பலருக்கு, தமது வா
கைக்கான சகல சவுகரியங்க
நிரப்ப நிரம்ப இருக்கின்றன.
லும், சர்க்கார் தரும் பணத்தை
விதவிதமாகப் பணப் பெட்டி
கொண்டு குவிக்கும் ஆர்வத்தி
கிடக்கின்றனர்.

இத்தகைய கொள்ளைலாபக்
பலிலே, முகர்ஜி, ஒரு வில
எனவே அதிசயப்படுகிறேம்!!

"மத்தியசர்க்காருக்குள்ள பணக் ஷ்டம்தான்"

"உண்மைக்காரணம் அதுதானு— ல்லது அவர்தம் அனுமதியின்றி, சன்னைசர்க்கார் சில திட்டங்களைப் பாட்டதாலா?"

"சேச்சே! சர்வாதிகார எண்ணங் காண்டதல்லவே நேருவின் க்கார்."

"பின் ஏன் உதவவில்லை?"

"உருப்படாத திட்டங்களெனக் ருதியிருக்கலாம்......"

"எது, அணைக்கட்டுவதும், நீர்ப் சனவசதிசெய்வதுமா......?"

"அதை மறுப்பரோ! வேறு தாவது இருக்கும்"

"வளர்த்தாதே--'அனுமதியின்றி ட்டங்களை வகுத்தனரே திமிர க்குவோம்' — என்கிற ஆத்திரம் னே, காரணம்?"

"அப்படியெல்லாம் இருக்காது"

* * *

கோபாலர் கூறிய வார்த்தைகளை வத்து தேசியத் தோழர் ஒருவ பக் கேட்டால், இவ்விதம்தான் தில் தருவார். "பணமில்லாததால் ன் உதவவில்லை" என்று, வலி த்தி, வகைப்படுத்தி கூறுவார். ஆல் அதற்கும் பதில் தந்திருக்கி ர் கோபாலர் டில்லி மறுத்த ற்கு பணமில்லாதது அல்லவாம், ரணம்!

"சென்னை கேட்டால் பண உதவி சய்யாத மத்தியசர்க்கார், மற்றமாகா ணங்களுக்கு நிறைய உதவியிருக்கி ர்கள்" சென்னைக்குப் பணமில்லை ஆனால் மற்ற மாகாணங்களுக்கு உதவியிருக்கிறார்கள். அதுவும் தாரணமாகவல்ல; நிறைய உதவி ருக்கிறார்கள்! அதுவும் எப்படிப் ட்ட மாகாணங்களுக்கு? 'பணம் தவைப்படுகிறது' என்ற திட்டங் ள் எதுவும்போட்டு உதவிக்குக்காத் ருக்காத மாகாணங்களுக்கு!! செல ழிக்க வகையும் வழியுமில்லாதபிற மாகாணங்களுக்கு நிறைய பண தவி அளித்திருக்கிறார்கள்—செல ழிக்கத் திட்டங்கள் போட்ட சென் னைக்கு போதிய உதவி தரவில்லை!! he Government of India did ot allocate Sufficient funds to his State, which was in a position to spend, while they allotted large sums to other states which were not yet in a position to spend — கோபாலரின் பேச்சு, இது.

திட்டத்தைத் தீட்டிக்கொண்டு 'திருவோடு ஏந்திற்று' சென்னை. திரும்பிப் பார்க்கவில்லை, டில்லி. அதேநேரத்தில், மற்ற மாகாணங் களுக்கு ஒருபக்கம் நிதி உதவி தந் தது அதோடுமட்டுமல்ல, பலபெரிய அணைத்தேக்கங்களை, மத்திய சர்க் காரே கட்டித்தர முனைந்திருக்கி றது. இதுவும் நாம் கூறுவதல்ல!

"மத்திய சர்க்காரால் பண உதவி செய்யப்படும் தாமோதரர் பள்ளத் தாக்கு ஹீராகுட் அணைத் தேக்கம் போன்ற திட்டங்கள் எதுவும் இங்கே கிடையாது. அதுபோன்ற பெரிய திட்டங்கள் எதற்கும், பண உதவி செய்யவில்லை."

★

நன்செய் விளையவும், நல்ல தொழில் ஆலைகள் வளரவும், மின் சாரம் பரவவும் அணைக்கட்டுகள் அவசியம். இந்த மூலச்செலவுகளில் போடும் பணம், பலனும் பயனும் தருவதாகும். பஞ்சமும் பட்டினி யும் ஒழிக்க, வழி செய்து தருவதா கும். இத்தகைய நல்லதிட்டத்துக்கு மத்திய சர்க்கார், உதவவில்லை. மத்திய சர்க்காரின் ஆத்திரத்தை யும், வஞ்சகத்தையும் கோபாலர் படம் பிடித்துக்காட்டுகிறார்—குமுற லோடு. நாம் கூறிடின், நையாண்டி செய்வர், தேசீய நண்பர்கள். இப் போதென்ன சொல்வர்! மத்திய சர்க்கார், ஏன் இவ்வளவு மாச்சரியத் தைக்காட்டவேண்டும், சென்னை மீது. வடநாட்டில் வளம்! இங்கே வறுமை!! — இதை வளர்ப்பதற்கா, பெயர் பரந்த தேசீயம்? சில திட் டங்களைக் கேட்டுச் செய்யவில்லை யென்பதால் இவ்வளவு துரோகமா! அல்லது தென்னாடு எக்கேடுகெட் டால் என்ன என்கிற வஞ்சகமா! அல்லது 'வரி செலுத்தத்தான் நீ. வாங்கத்தான், நான்' என்கிற சர் வாதிகார மமதையா—எதைச் சொல் வீர்கள் காரணமாக, கோபாலர் படம் பிடித்துக் காட்டுகிறார் — மத்திய சர்க்காரைப்பற்றி. இப்- போது கூறுங்கள் நண்பர்களே, எதுசரி! எது உண்மை!!

*

# புது இதழ்கள்

**எதிரொலி:-**

தி. மு. க. பிரச்சாரக்குழுத் தோழர் N. S. இளங்கோவை ஆசி ரியராகக் கொண்டு தஞ்சை மாவட் டம் அதிராம்பட்டினத்திலிருந்து 'எதிரொலி' எழும்பியிருக்கிறது. நண்பர் இளங்கோவின் முயற்சியால் எழும்பும், இந்த ஒலி, திராவிட சமுதாயத்தின் இதய வலியைப் போக்கப் பாடுபடும் — அறிவுலகுக் குப் பணியாற்றுமென நம்புகிறோம். நஞ்செய் பூமியிலிருந்து எழும்பும் இந்த 'எதிரொலி', வளர்ந்து, கொள் கைகள் பரப்ப வேண்டுமென வாழ்த்துகிறோம்—வரவேற்கிறோம். எதிரொலி 12-பக்கங்கள்:-

விலை 0—2—0.

**நெல்லைத்தோழன்:**

தூத்துக்குடித் தோழர் K. V. K. சாமியின் 'நெல்லைத்தோழன்' இரு வாரமாக, வெளிவரத் துவங்கியிருக் கிறது. தொழிலாள மக்களின் துயர் நீக்குவதே, நெல்லைத்தோழன் முக்கிய குறிக்கோள் என அறிகி றோம். தோழரின் முயற்சியைப் பாராட்டுகிறோம். வாழ்க நெல்லைத் தோழன்!

6-பக்கங்கள் (பெரிய அளவு)

விலை. 0—2—0.

---

# சந்தாதாரர்களுக்கு

சந்தாதாரத் தோழர்கள் அனை வரும் கீழ்க்குறிப்பிட்டவைகளைகவ னத்தில் கொள்ளக் கோருகிறோம்:

1. கடிதம், மணியார்டர் முதலிய வைகளில் தவறாது சந்தா எண் ணைக் குறிக்கவும்.
2. முகவரியை மாற்றும்படி சொல் பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.
3. ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப் பட்டிருக்கிறது. அத் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப் பித்துக் கொள்ளுங்கள். இல்லையெனில் குறிப்பிட்ட தேதியோடு பத்திரிகை நிறுத்திவிடப்படும்.

மானேஜர்.

திராவிடநாடு

காஞ்சி] 23—3—52 [ஞாயிறு

# 'உதவி வருகிறது!'

★

பாலைவனத்தை சோலைவனமாக்கிய பெருமை ரஷ்ய மக்களுக்கும் அதன் தலைவர்களுக்கும் உண்டு. அதள பாதாளத்தில் கிடந்த ரஷ்ய பூமியில், தொழில் வளர்ச்சி குலுங்கச் செய்த மகத்தான பெருமை பெற்றவர்கள், அவர்கள். பெரிய ஆலைகளும், சின்னஞ் சிறு தொழில்களும், அமைத்து, ஒரு சிங்காரக் கோட்டமாக ஆக்கியிருக்கிறார்கள்—கால் நூற்றாண்டுக்குள். ரஷ்யா, பெரும்பாலும் விவசாயம் நிரம்பிய நாடாகும்! விவசாயிகள் நிரம்பிய எந்த நாட்டிலும், தொழில் வளர்ச்சி, இவ்வளவு பெருமிதமாக வளர்வதென்பது—சாதாரண காரியமல்ல. ஆகவேதான், சோவியத் சாதனை, கேட்டு பலர் திகைக்கிறார்கள்! 'எப்படி முடிந்தது?' என்று வியக்கிறார்கள்!!

ரஷ்யாவைப் போல, இந்தியாவும், விவசாய நாடுதான். பொருளாதாரம், விவசாயத்தின் அடிப்படையில் தான் அமைந்து கிடக்கிறது. ஆகவே, ரஷ்யாவைப் பார்த்து, அதன் திட்டங்களை ஆராய்ந்து, பலன் காண முடியும், இந்திய ஆட்சியாளர்கள்.

இன்று தொழில் துறையில் என்ன தொல்லைகளிருப்பதாக இங்குள்ளவர்கள் கூறுகிறார்களோ, அதைவிடப் பன்மடங்கு சங்கடங்களைத் தாங்கவேண்டியவர்களாயிருந்தார்கள், ரஷ்ய மக்கள்—புரட்சிக்குப் பின். முதல் ஐந்து ஆண்டுத் திட்டமொன்று போட்டு அதை அமுல் நடத்த முயன்றபோது சோவியத் தலைவர்கள், பலப்பல பிரச்சினைகளைச் சமாளிக்கவேண்டியவர்களானார்கள் — புதிய பொருளாதார திட்டத்தை அமைக்க வேண்டியவர்களானார்கள்!

அதே முயற்சியில், இப்போது, இந்திய பொருளாதார நிபுணர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் — இங்கு. இந்திய தேசிய பொருளாதாரத் திட்டம் பற்றி, ஆலோசனையில் ஆழ்ந்திருப்போர், ரஷ்யாவின் சாதனைகளைக் கவனிக்க வேண்டும்—'எப்படிச் செய்தனர்?' என்ற ஆவலோடு ஆராய வேண்டும். வேற்றுமை மனோபாவம் ஒழித்து, ரஷ்யாவின் சாதனைகளை ஆராய்ந்தால், இங்கேற்படும் ஒழுங்கீனங்களும், வீண் விரயமும் ஒழிய வழி காணலாம்.

'ரஷ்யாவா கூடாது, கூடாது!' என்று, கண்ணையும் காதையும் பொத்திக் கொள்வது, வீண் சந்தேகத்தின் விளைவாகும். ஏதேச்சாதிகார ஆசை கொண்டோரே, இப்படிப் பேசுவர். மக்கள் வாழ்வை வளமாக்கும் ஆசைகொண்ட எவரும், எங்கெங்கே நல்வழி தென்படுகிறதோ, அதையெல்லாம் தேடிக் கொணர்ந்து சிந்தித்து செயல் புரிய தயங்க மாட்டார்!

இன்று இந்திய மக்களுக்குள்ள முக்கிய பிரச்சினை ஏழ்மையும் பட்டினியும் தான். இந்தப் பிரச்சினைகள் அவசியம் கவனிக்கப்பட வேண்டும். பட்டினியிருப்பதால் ஏழ்மை வளருகிறது—ஏழ்மையால் அறியாமை ஆட்சி புரியத் துவங்குகிறது — முன்னேற்றம் முகிழ்ப்பதில்லை. நாடு வளம் பெறும் நற்பணிகள், பரவுவதுமில்லை! வளர்வதுமில்லை!! இலட்சக் கணக்கானோர் பட்டினியால் பரதவிக்கும்போது அமைதியும் வாழ்வும் எப்படி யேற்பட முடியும்? இன்று அகில உலகத்தையும் எடுத்துப்பார்த்தால், முன்னேறாத பல நாடுகளின், முக்கிய பிரச்சினையாக இருப்பது உணவுதான்.

இந்த உணவுப் பஞ்சம் ஒழிய வேண்டுமானால், முக்கிய மாற்றங்கள், விவசாயத் துறையில் ஏற்பட வேண்டும்.

இன்று உலகில், பொருளாதாரச் செழிப்பு, தொழில் வளர்ச்சியை வைத்தே மதிப்பிடப்படுகிறது. எந்த நாட்டில் ஆலைகள் அதிகமோ, எந்த நாடு அதிக உற்பத்தியைப் பெருக்கி வெளிநாடுகளுக்கெல்லாம் அனுப்புகிறதோ, அதைத்தான் மதிக்கின்றனர். தொழில் வளர்ச்சி அதிகரித்தால், பொருளா தாரம் முன்னேற முடியும்! ஆனால் இந்திய துணைக்கண்டத்திலோ தொழில் வளர்ச்சி—மிக மிக குறைவாக இருக்கிறது. அமெரிக் நாட்டையும் இந்தியாவையும் ஒப் பிட்டால், இன்றுள்ள நிலைமையி அமெரிக்காவை எட்டிப் பிடிக் கிட்டத்தட்ட நூறு ஆண்டுகள் ஆகுமாம்! சிறு நாடு ஜப்பானைவி நமது தொழில் வளர்ச்சி ஐந்தில் ஒரு பாகம் கூட இல்லை! தொழி வளர்ச்சியில் இவ்வளவு பின்னணியி லிருக்கிறோம். ஆலைப் புரட்சிகள் மறுமலர்ச்சித் தென்றலெல்லாம் வெளிநாடுகளிலே வீசியிருக்கிறது பண்ணைக்காரர்களின் வாழ்க்கை பிரச்சினைகளைத் தீர்த்து வைம்காண செய்திருக்கிறது! இரண்டு நூற்றாண் டுக்குமுன்—அங்கே யெல்லாம் இந் மாறுதல். இப்போதோ இருபதா நூற்றாண்டு! நாம் எப்போது போலத்தான் இருக்கிறோம். ஆ கள் வளரவுமில்லை — தொழி

## உறுப்பினராகுங்கள்

—

உறுப்பினர் சேர்க்கும் ப ஆங்காங்கே தீவிரமாக நடைபெற செய்தி நமக்கு வந்தவண்ண முள்ளன.

உறுப்பினர்கள் சேர்த்தபணமு ரசீதும் நமக்கு வந்துகொண்டிரு கின்றன.

தோழர்களின் ஆர்வம் கா மகிழ்கிறோம்—அவர்கள் இன்னு தீவிரமாகப் பணியாற்றவேண்டு பொதுக்குழு கூட்டம் 6—4—52 கூடவிருக்கிறது—அதற்குள் நிறை உறுப்பினர்கள் சேர்த்தாக வே டும்.

இந்தப்பணிமுடிந்ததும்,சிற்றூ நகர,வட்டட்—மாவட்டக் கழகங்க புதுசட்டதிட்டபடி அமைக்கப்ப டாகவேண்டும்.

ஆகவே சீக்கிரம் முடிக்கப்ப வேண்டும் உறுப்பினர் சேர்க்கு பணி. உடனுக்குடன் தகவல் தெ வியுங்கள். உறுப்பினர் சேருங்க ஒவ்வொரு வீடாகச்சென்று உறு ப்பினரைச் சேருங்கள்!!

தி. மு. க.

[உற்]பத்தி அதிகரிக்கவுமில்லை. இதனால், இங்கே பொருளாதாரச் செழிப்பும் ஏற்பட முடியவில்லை.

"விவசாயத்தின் அடிப்படையில் பொருளாதாரத்தை அமைத்துக் கொண்டுள்ள சிலநாடுகள் மிக மிக உயர்ந்த வாழ்க்கையை அனுபவிக்கின்றன" என்று அண்மையில் (Peter wooti) என்கிற பொருளாதார அறிஞர் குறிப்பிட்டதுபோல, சிலநாடுகள் இருக்கின்றன.

ஆனால் இன்று பெரும்பாலான நாடுகளின் பொருளாதாரம், தொழில் வளர்ச்சியின் மூலமே, கணக்கிடப்பட்டு, வருகிறது.

இந்நிலையில் பின்தங்கியிருக்கும் இந்தியாவின் நிலை என்ன?-வேதனையானது! மக்கள் பெருக்கம் ஒருபக்கம்-பசியும் ஏழ்மையும் மற்றோர் பக்கம். இந்த சங்கடமான நிலைமையைத் தவிர்க்கவேண்டுமென்றால், விவசாயம் அதிகமானால் மட்டும் போதாது; நன்செய் அதிகமாவதாலோ, தரிசுகள் பண்படுத்தப்படுவதாலோமட்டும், இங்குள்ள பிரச்சினைகள் முடிவு பெற்றுவிட முடியாது.

எனெனில் விவசாயத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் நிலங்களைவிட, அதிகமான உழைப்பாள மக்கள் குவிந்திருக்கிறார்கள். மக்கள்பெருக்கத்தால் கிராமங்களில் ஜனப்புழக்கம் வர வர உயர்ந்து கொண்டே போகிறது. இத்தனைபேரும் விவசாயத்தையே நம்பியிருந்துவிடவும் முடியாது!

அதிகரித்துக்கொண்டேபோகும் பாமர மக்களின் வாழ்க்கைவசதிக்கு தொழிலாலைகள் வேண்டும். — மிக மிக அதிகமாக வேண்டும். தொழில் உற்பத்தி அதிகரித்தால்தான், ஏழ்மையால் அவதிப்படும் விவசாயிகள் கூட்டம், பொருள்களை உற்பத்தி செய்து, தமதுபொருளாதாரத்தை வளமாக்கிக்கொள்ள இயலும்.

தொழில் வளரவேண்டும்! ஆனால் அதற்கான வசதிகள்? நவீன தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருள்களும் இங்கே இருக்கின்றன. ஆனால் அவைகளை உபயோகிக்கும் இயந்திர சாதனங்களும், தொழிலறிஞர்களும்தான் இல்லை! இதற்கான வழிவகைகளைக் காணவேண்டிய, அவசியம் ஏற்பட்டிருக்கிறது. நான்முகனும் நாவுக்கரசி கலைமகளையும், லட்சுமிதேவியையும் நம்பிவிட்டால் போதாது — பூஜையும் அர்ச்சனையும் பலன்தந்துவிடாது — அறிஞர்கள் வேண்டும்! ஆலைகள் வேண்டும்!!

ஆலைகளும் அறிஞர்களும் கிடைத்துவிட்டால் மட்டும்போதாது — அவைகளை நிர்மாணிக்கப் பணமும் வேண்டும். இங்குள்ள நிலையோ, இதிலும் பூஜ்யம்தான்! இந்தத் திட்டங்களை, நடைமுறையில் செய்ய, போதியபணம் கிடையாது சர்க்காரிடத்தில். பணம்பெற்றிருக்கும் சிலமுதலாளிகளோ, பதுக்கிய பணத்தை எடுக்கபயந்துகொண்டிருக்கிறார்கள். பதுக்கிய பணம், அகப்பட்டால்கூட இன்றைய தேவையை பூர்த்திசெய்யுமா? செய்யாது! அப்படியானால் என்ன செய்வது? ஆலைகள் பெருகவேண்டும் — பணமோ இல்லை! சர்க்கார் தவிக்கிறது!

இந்த நெருக்கடியான கட்டம்தான் இங்கு, இப்போது ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சிக்கலைக்கண்ட காங்கிரஸ் ஆட்சியினரோ கலங்கிப் போயினர். அவர்கள் சலக்கத்துக்கு காரணம் இந்திய சமூக அமைப்புத்தான்! எல்லாவற்றையும் சர்க்காரே ஏற்று நடத்தும் முறைஏற்பட்டிருந்தால் இந்தக் கலக்கம் எழ பக்காரணமில்லை. ஆனால் இங்குள்ள நிலைமையோ! சிலர் முதலாளிகளாக இருக்கிறார்கள் — அவர்கள் பணப்பெட்டியில் பணம் கிடக்கிறது — பலர் மூலப்பொருள்களை உற்பத்தி செய்யும் நிலப்பிரபுக்களாக இருக்கிறார்கள்—பெரிய பெரிய இரும்பு காய்ச்சும் ஆலைகளும், நிலக்கரி வயல்களும் சிலர் வசம் சிக்கியிருக்கிறது. தனி முதலாளிகள் ஒரு பக்கம்! சர்க்கார் மற்றோர் பக்கம்! — இந்தக்கோளாறுக்கு, தலைவணங்கிவிட்டது, காங்கிரஸ் இயக்கம். காங்கிரசின் பொருளாதார முறையே முதலாளிகளுக்குச் சாதகமானதுதானே!

இதனால் இங்குள்ள முதலாளிகளைத் தாஜா செய்ய வேண்டியவர்களானார்கள் காங்கிரஸ் தலைமையினர். காங்கிரஸ் விடுதலை இயக்கமாக இருந்த நிலைமாறி, ஆட்சியை ஏற்று நடத்தும் பொறுப்பை ஏற்றதும் ஆலையாசர்களும் பணக்காரர்களும் அதன் "சூத்ரதாரி" களாகமாறி விட்டார்கள். அதன் காரணமாகவே, அவர்கள் இஷ்டப்படியெல்லாம், சர்க்கார் வளைந்து கொடுத்து வருகிறது. ஆலையரசர் ஒரு பக்கம் — பணமுதலைகள் மற்றோர் பக்கம். நடுவிலே சர்க்கார்! மக்களோ பாதாளத்தில்! இது, தொடர்ந்து நடைபெறுவதை நாம் அறிவோம். உதாரணம் வேண்டுமென்றால் கடந்தவார நிகழ்ச்சியொன்றைக் காட்டலாம்! விலைவாசிகள் வீழ்ந்தன — காரணங்களில் ஏற்றுமதி வரியை அதிகமாக்கியது ஒன்று எனக் கூறப்பட்டது — மக்கள் மகிழ்ந்தனர்—விலைவாசிகள் வீழ்ந்ததைக்கண்டு — ஆனால் முதலாளிகளும் 'சூதாடிகளுமோ' ஏற்றுமதி வரி குறைக்கப்பட வேண்டுமென்று தந்திமேல் தந்தி கொடுத்தனர்—தேசிய பத்திரிகைகளோ, 'சில நூறு பணக்கார வியாபாரிகளுக்காக பல கோடி மக்களை அவதியுறச் செய்யாதீர்கள்' என்று எழுதின—ஏற்றுமதி வரியைக் குறைக்காதே என்று வலியுறுத்தின. ஆனால் இந்திய சர்க்காரோ விலைவாசி வீழ்ந்த ஒரு வாரத்திற்கெல்லாம் பருத்தி, எண்ணெய்வித்துகள் போன்றவைகளின் ஏற்றுமதி வரியை, குறைத்து உத்திரவு பிறப்பித்து விட்டனர். மக்கள்நலன், சில பணக்காரர்களுக்காக பலியாகிறது!

முதலாளிகள் சார்பாக இருக்க வேண்டுமெனும் ஆர்வத்தால், முதலாளித்துவத்திற்கு எதிரான எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை, காங்கிரஸ் ஆட்சி. இதனாலேயே, ஆலை வளர்ச்சிபற்றிய பிரச்சினைவந்ததும் கலங்கினர். சர்க்கார் கலக்கம் கண்ட முதலாளிகளோ மகிழ்ந்தனர். இப்

## தி. மு. கழக நிதிக்கு

### நடிகவேள் ராதா

சென்னிமலை தி. மு. க கழகநிதிக்காக. சென்னிமலை மேட்டாபீசுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள அர்ச்சுனன் நினைவு அரங்கில் மார்ச் 28, 29, 30. ஆகிய நாட்களில் நடிகவேள் எம். ஆர். ராதா, நடிக்கும் நாடகங்கள் முறையே இரத்தக்கண்ணீர், பேப்பர் நீயூஸ், இரத்தக்கண்ணீர் ஆகியவை நடைபெற ஏற்பாடாகி வருகிறது.

போது, கொட்டம் அடிக்கத் துவங்கியிருக்கிறார்கள்—அந்நிய முதலாளிகளோடு சேர்ந்து கொண்டு. எந்த காங்கிரஸ்காரர்கள் அந்நியர்களை விரட்டியதாகப் பேசுகிறார்களோ, அவர்களே அந்நியரை 'வருக வருக' என அழைக்கின்றனர். அழைப்பைக் காணும் அவர்களோ நிபந்தனைகள் கேட்கிறார்கள்! நிபந்தனையையும் ஒப்புக்கொண்டு. அவர்களுக்கு வரவேற்பு வழங்கப்படுகிறது. அமெரிக்காவில் இந்தியத் தூதராக இருக்கும் பி. ஆர். சென் இந்தவாரம் கூறியிருக்கிறார்—அமெரிக்க முதலாளிகளுக்கு.

"தனிப்பட்ட முதலாளிகள் தொழில் ஆலைகள் துவக்குவதை மகிழ்ச்சியோடு வரவேற்போம். அவர்கள் ஆலைகளுக்கான எல்லா வித உறுதியையும் ஒத்துழைப்பையும் இந்திய சர்க்கார் தரும்"

★

உலகு இரு கூடாரங்களாகியிருப்பதையாவரும் அறிவர். வளர்ந்து வரும் பொதுவுடைமைப் பயலைக் கண்டு, முதலாளித்துவத்தின்மோகனபுரியாக இருக்கும் அமெரிக்கா, உலகெங்கும் தனது ஆதிக்கத்தைச் செலுத்த பலவகையாலும் முயற்சித்து வருகிறது. முன்னேற்றமடையாத பிற்போக்கு நாடுகளை 'பணவலை' மூலம் வீழ்த்தி வருகிறது. இதன் அறிகுறிகளை, நாம் இங்கு நன்றாக காண்கிறோம். தொழில்வளர்ச்சி! உணவு!!—இந்த இரண்டும் மில்லாத இந்தியாவை, வெகுஎளிதில், வீழ்த்திவருகிறது—அமெரிக்கா. இதற்கு, இங்குள்ள முதலாளித்துவ வாதிகள், ஒத்துழைத்துவருகிறார்கள். ஆனால் நேருவோ, ஜம்பமாகப் பேசுகிறார்!

"எந்த கூடாரத்திலும் இந்தியா சேராது" என்பதாக. "அமெரிக்கா உதவி செய்கிறது" என்று கூறுகிறார், ஆனால் இந்த உதவியின் உள் ரகசியம் என்ன? கடந்த மார்ச்சு 7ந் தேதி அமெரிக்க சட்டசபையில் பேசியிருக்கிறார் ட்ரூமன்—வெளிநாடுகளுக்குபண உதவி செய்யும்நோக்கம் குறித்து.

"கம்யூனிஸ்டுகள் முன்னேற்றமடையாத நாடுகளை வீழ்த்தமுயற்சிக்கின்றனர், இதைத்தடுப்பதே பண உதவியின் நோக்கமாகும். வெளி நாடுகளில் நமக்கானவர்களை நாம் ஏற்படுத்திக் - கொள்ளாவிட்டால், நமது கரையோரத்துக்கருகே ஆபத்து வந்துவிடும். அப்படியேற் பட்டால், நம்மை நாமே காத்துக்கொள்வதென்றால் ஏராளமான படைகளை நாமே திரட்டவேண்டும். நமது தேவைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்துக்கு நாம் ஆளாவோம். நம்மோடு நேசங்கொள்ளும் நாடுகளிடமிருந்து கிடைக்கும் தளவாடம், படைபலத்தைவிட இங்கேயே நாம் எல்லாம் செய்வதென்றால்—அது நமக்குத்தான் கேட்டைத் தரும்"

அமெரிக்கத் தலைவர்—உதவியளிப்பவர் கூறுகிறார்—இப்படி! ஆனால் உதவி பெறும் நேருவோ, 'பரஸ்பரசகாயம்' என்று கருதுகிறார்!!

"வேறு என்ன செய்வோம்?
நம்மிடமோ வசதியில்லை
உணவும் பணமும் இல்லை.
இந்நிலையில் உதவியில்லாமல்
வாழமுடியுமோ?"

என்று கேட்கத் தோன்றும். பரஸ்பர உதவியில்லாமல் வாழமுடியாது தான்! ஆனால் உதவியென்கிற பேரால், வீட்டுக்குள் நுழைந்து 'தர்பார்' நடத்த விரும்புகிறவனை அனுமதிக்கவா முடியும்?

"பணம் பெற்றால், அனுமதித்ததாகவா, அர்த்தம்?" என்று கேட்கலாம். அமெரிக்க சர்க்கார் பண உதவியை "அள்ளி"க் கொடுத்துவிட்டு சும்மாயிருக்கவில்லை. அதன் பேரில் பல நிர்வாகிகளையும் அனுப்பத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது! ஒரு பக்கம் வெளிநாட்டினரின் ஆலைகள் — தனிப்பட்ட முதலாளிகளின் கொட்டம்; மற்றோர் பக்கம் வெளிநாட்டு சர்க்கார் ஆதிக்கம் செலுத்தக்கூடிய வழி வகைகள்! இதன் விளைவு ஆபத்தைத்தானே தரும்?

"சரியப்பா! உன் யோசனைப்படி அமெரிக்க உதவியை அலட்சியம் செய்து விடுகிறோம். பிறகு என்ன செய்வது?" என்று கேட்கலாம்.

---

# ஓமாந்தூரார் பேசுகிறார்!

[சென்னை மேல் சபையில் 19—3 52 அன்று முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி அவர்கள் பேசிய போது குறிப்பிட்டார்—டில்லியின் அலட்சியம் குறித்து. அவைகளில், சில:]

"சென்னையின் நன்மைகள் பற்றி மத்ய சர்க்கார் அதிசிரத்தை கொள்வதில்லை. இதுவரை சென்னைக்கு செய்திருக்கும் உதவியையும் மற்ற மாகாணங்களுக்கு செய்திருக்கும் உதவியையும் ஒப்பிட்டுப் பார்த்துச் சொல்கிறேன்.

* * *

இன்று சென்னையிலுள்ள கஷ்ட நிலைமைக்கு யூனியன் சர்க்காரின் போக்கே காரணம்.

* * *

சென்னையைப் பொறுத்த வரையில் மத்திய சர்க்கார் நியாயமாகவே நடந்துகொள்ளவில்லை. இங்கிருந்து மத்திய சட்டசபைக்குச் சென்ற சட்டசபை உறுப்பினர்களும் தமது கடமைகளைச் சரிவரச் செய்ய வில்லை.

* * *

ஒவ்வொரு விஷயத்திலும், மற்ற மாகாணங்களோடு, ஒப்பிட்டால், சென்னை, பெருத்த அளவில் உதாசீனம் செய்யப்பட்டிருப்பதோடு, மோசமாகவும் நடத்தப்பட்டிருக்கிறது.

* * *

நான் முதலமைச்சராயிருந்த போது, ஒவ்வொரு தடவையும் டில்லிக்குச் சென்று, மத்திய சர்க்காருடன் சண்டை போட வேண்டியிருந்தது. ஆனால், என்னோடு அப்போதிருந்த சகாக்களின் ஒத்துழைப்பு போதுமான அளவு கிடைக்காததால், என் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

* * *

ஒருபோது எல்லா மாகாணங்களையும்விட முதன்மையிலிருந்த நமது மாகாணம், இன்று அதள பாதாளத்தில் கிடக்கிறது – மிகமிக மோசமாகிவிட்டது.

அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

உதவி பெறுவது—தவறல்ல!
ஆனால் அந்த உதவியால்
ஆபத்து வரக்கூடாது!!

அமெரிக்க உதவியால், ஆபத்து வரும் அறிகுறி தென்படுகிறது அதுமட்டுமல்ல, தவிக்கும் ஏழைகள், நிலை மாறாததன்மை ஏற்படும் என்றும் தெரிகிறது.

உதவி கிடைப்பது சரி—ஆனால் அந்த உதவி, "ஒரு சிலர்" அளவிலிருந்துவிடக்கூடாது. நாட்டுக்கும் மக்களுக்கும் பொதுவானதாக வேண்டும். எல்லோருக்கும் நன்மை செய்வதாயிருக்கவேண்டும்.

எல்லோருக்கும் நன்மை—இந்நிலை வர, முதலாளித்துவ சமூக அமைப்பு, எப்போதும் இடம் தாரது. சாகசத்தால் தன்னை உயர்த்திக்கொள்வதுதான், முதலாளித்துவத்தின் முக்கிய கொள்கை. முதலாளித்துவ அமைப்பில என்றும் ஏழைகள் இன்பம் காண முடியாது! அமெரிக்கா உதவி செய்கிறதென்று சொன்னால், அது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள—தனது முதலாளித்துவ அமைப்பை நிலைநாட்ட — மூன்றாவது உலகப் போரின்போது தான் தாக்கப்படாமலிருக்க.

இது தவிர எல்லோரும் வாழவேண்டும் என்ற ஆசையினால் அல்ல; இந்த முக்கிய வேற்றுமையை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

இங்குள்ள உணவுப் பிரச்சினை, தொழில் வளர்ச்சி — ஆகியவைகளின் முக்கியத்துவத்தை நன்றாக அறிவோம் — இது திருத்தியமைக்கப்படால்தான், நமது வாழ்வு நன்கு அமைய முடியும்.

என்ன வழி இதற்கு? இன்றுள்ள சமூக அமைப்பில் மாறுதல் வேண்டும் — முதலாளித்துவ முறைகள் ஒழிக்கப்பட வேண்டும்— புது முறை ஒன்று தேவை!

அந்தப் புதுமுறையை ஒழிக்கத்தான், அமெரிக்கா பண உதவிசெய்கிறது—பரிந்து வருகிறது.

★

"ஓ! கம்யூனிசம்!!" பயங்கரத்தோடு, பதில் கூறுவர், இதைக் கேட்டதும். அவர்தம் கூற்றைக் கவனிக்குமுன் இத்தகைய பயத்தைப் பரப்புவோர் தன்மைகளைக் கவனித்தால் உண்மை விளங்கும். பிரமையைச் சிருஷ்டித்து, மக்களிடையில் கலக்கத்தை உண்டாக்கி, தமது நிலை சிறிதும் தாழக்கூடாது, இன்ப நிலை மாறக்கூடாது எனும் எண்ணத்தோடு உலவுபவரே, இத்தகைய பிரச்சாரத்தைப் பரப்புகிறார்கள். பார்க்கிறோம் நாம்! 'ரஷ்ய ஆபத்து'—பயத்தோடு சொல்வது பாரியல்ல; பாரையே விலைக்கு வாங்கும் அமெரிக்கத் தூதர், 'ஐயயோ, கம்யூனிசமா?' — ஏழையல்ல கூறுபவன்; இன்னொரு நாட்டைச் சுரண்ட விரும்பும் பிரிட்டிஷ் முதலாளி. மாடிக் கட்டிடம் படைத்த 'இந்து'வும் 'மித்திரனும்' 'கோயங்காவும்' 'கோதாரி'யும், மடாதிபதியும், கோயில் சுரண்டியும்தான் கூவுகிறார்கள்—அலறுகிறார்கள்; ஏழையல்ல, தவிப்பவனல்ல, ஆலையிலே தன் உடம்பையும் வாழ்வையும் அடகுவைத்தவனல்ல.

கம்யூனிசம் என்பது ஒரு கொள்கை—ஏழைகள் வாழவேண்டுமெனக் கூறும ஒரு கோட்பாடு. இதைக் கண்டேன் அஞ்சவேண்டும்? இதைப்பற்றி, கடந்த 14ந் தேதி காஞ்சியில் பேசிய ஜீவானந்தம், அழகாகச சொன்னார். "மண்ணைக் காட்டி சர்க்கரை யென்றால் மக்கள் நம்பவா செய்வார்கள். சர்க்கரையைக் காட்டி 'மண் அது மயங்காதே' என்பது பலன் தரும்?" என்ற உதாரணத்தோடு. அவர் மேலும் குறிப்பிட்டார், "கம்யூனிசம் என்பது ஏதோ ஒன்று—அது யாரோ சொல்வது என்று கருதாதீர்கள். அது ஒரு பொதுக் கொள்கை. உலகிலே ஏழ்மையை ஒழிக்கக் காட்டிய கொள்கை. அந்தக் கொள்கையை எந்தப் பெயரோடு நடத்தினாலும் சரி — நாங்கள் விரும்புவதெல்லாம் ஒருவன் கஷ்டப்படவும், இன்னொருவன் சுகபோகமாகவும் ஏன் வாழவேண்டும்?" என்பதுதான். உண்மை, இது! ஒன்று ஏழையர் உலகம் — மற்றொன்று பணக்கார உலகம். இதில் எது தேவையென்பது தான் இன்றுள்ள பிரச்சினை. அமெரிக்கா பணக்கார வழியைக் கூறுகிறது! இதை எவரே ஏற்க முடியும்?

இதனால் தான், அமெரிக்காவின் உள் நோக்கம் கண்டு, அஞ்சுகிறோம். அதற்கு ஆதரவு தரும் நேரு சர்க்கார் கண்டு கலங்குகிறோம்.

"அஞ்சினால் போதுமா! கலங்கி

---

## கழக கட்டிடம்

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த குள்ளம்பட்டியில் தி. மு. கழகக் கட்டிடம் பத்தாயிரத்திற்குமேலாக செலவிட்டு, அழகாகக் கட்டப்பட்டுள்ளது. மே மாதத்தில் அதன் திறப்புவிழா நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

---

## வேண்டுகோள்

"மலேயா சர்க்காரால் தூக்குத் தண்டனைக்கனுப்பப்பட்ட கன்னையா அதிலிருந்து தப்பி இன்று ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்று வருகிறார். அவரை நம்பி வாழ்ந்த அவரது குடும்பம் தெருவீதியிலே நிற்கிறது. வறுமையோடு போராடி வாழ்க்கையிலே துன்ப முத்திரை பொறிக்கப்பட்ட அவரது குடும்பம் நாதியற்றுத் தவிக்கிறது.

நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த கன்னையாவை நம்பி வாழும் உயிர்கள் ஐந்து. கிழத்தாய்—தந்தை-விதவை சகோதரி — இரண்டு தங்கைகள். அவர்கள் அனைவரும் கன்னையாவை நம்பி வாழ்கிறார்கள். தூக்கு மேடையிலிருந்து கன்னையாவை தடபவைத்தோம். அதற்கென உழைத்த இடதுசாரி கட்சிகளுக்கும், இந்திய அரசாருக்கும் நன்றி தெரிவிக்கிறேன். பிரச்சினை முடிந்து விடவில்லை. சிறைத் தண்டனையை ரத்துசெய்து கன்னையாவை இந்தியாவிற்கு அனுப்ப மலேயா சர்க்காரை வற்புறுத்துவோம். அதற்காக உழைக்க சகல முற்போக்குக் கருத்துப் படைத்த கட்சிகள்—தொழிற்சங்கங்கள் — இயக்கங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். கூட்டங்களைக்கூட்டி—தீர்மானங்கள் நிறைவேற்றி—தந்திகள் அனுப்பி இந்திய சர்க்காரையும் மலேயா சர்க்காரையும்கேட்டுக்கொள்ளுவோம்." என்பதாக நாகர்கோயில் கன்னையா விடுதலைக்கமிட்டி செயலாளர் தோழர் அந்தோணி எழுதுகிறார்.

ஞல் போதுமா! உடனடி நிவாரணம் வேண்டுமே — அமெரிக்கா தானே உதவவருகிறது'' எனலாம்.

உண்மை அதுவல்ல; பொதுவுடைமை நாடான ரஷ்யாவும், பிற்போக்கு நாடுகளுக்கு உதவத் தயாராயிருக்கிறது.

இந்தியாவின் தொழில் வளர்ச்சி, உணவுப் பிரச்சினைகளுக்கு உதவி புரிய தயாராக இருக்கிறது. பம்பாயில் சமீபத்தில் நடந்த உலகநாடுகளின் பொருட் காட்சியில் பேசிய, ரஷ்யத்தூதர் நோவிகாவ் வெளியிட்டார், "இந்தியாவுக்குத்தேவையான, பெரிய இயந்திர சாதனங்களையும் ஆலைச் சாமான்களையும் அனுப்ப ரஷ்யா தயாராகஇருக்கிறது.'

இந்தக் கூற்றுக்கு ஆதாரமாக, வரும் ஏப்ரலில், ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் சர்வதேசப் பொருளாதார மாநாடு ஒன்று கூடப்போவதாகவும் அதில் இந்தியாவைச் சேர்ந்த வியாபாரிகள், தொழில் அதிபர்கள் தொழிற் சங்கத்தலைவர்கள், எல்லாம் அழைக்கப்பட்டிருப்பதாகவும் அறிகிறோம்.

"ஆகவே, வேறு யார் இருக்கிறார்கள் உதவி செய்ய!'' என்று காங்கிரஸ் தலைவர்கள் கூறுவது உண்மையல்ல.

இன்று மக்கள் விரும்புவது — ஒரு புதுவழி. அதற்கு மூடிபோட முயல்வது—பலனைத் தரமுடியாது. 'உதவி வருகிறது!' என்று சொல்லி, பழைய தர்பாருக்கு, வழி செய்வது மக்களால் இனி ஏற்கப்படாது. இதை மனதிலுறுத்தவேண்டும் — அமெரிக்காவுடன் ஆலிங்கனம் செய்வோர்!

ஆகவே, மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி உண்டாக்கக் கூடிய வழிகளைப் பின்பற்ற வேண்டும். கண்முன்னால் காண்கிறோம் ரஷ்யா, எப்படித் தொல்லைகளைத் தீர்த்து முன்னேறியிருப்பதென்பதை. அதே போலத்தான், விவசாயநாடான இந்திய உபகண்டமும் திட்டங்களைத் தீட்ட வேண்டும் — நேசத்தோடு 'புது வழி' கண்டோரிடம்பழகி மக்களின் துயர் துடைக்க முயலவேண்டும். பழையபாதை பலன் தராது! பழைய முறை கேடு தான் தரும்!!

## ஆலோசகர் நியமனம்

திருவாங்கூர் கொச்சிக்கு, டில்லிபீடம், ஆலோசகர் ஒருவரை நியமித்திருக்கிறது. பெயர்தான் ஆலோசகரே ஒழிய, இந்தநபருக்கு பல அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

"இந்த ஆலோசகருக்கு, உத்திரவுகள் பிரதம மந்திரி நேருவிடமிருந்தோ, அல்லது பார்லிமெண்டிலிருந்தோ வராது. மத்திய சர்க்கார் காரியாலயத்திலிருந்து தான் வரும். எனவே ராஜ்ய மந்திரிசபையின் ஆலோசனையிலிருந்து வரும் விஷயங்களை ஆலோசகர் கவனிக்க வேண்டியதில்லை. ஆலோசகரின் நியமனம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்காரைத் திணறடிக்கத் தான் உதவியாயிருக்கும்'' என்று திருவாங்கூர் ராஜ்யத்தின் முன்னாள் அட்வகேட் ஜெனரல் ஒருஅறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இந்த ஆலோசகர், மந்திரி சபையின் கூட்டங்களிலும் கலந்துகொள்வாராம். "சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு வெளி நபர் மந்திரிசபை கூட்டத்தில் கலந்து கொள்வது உலகில் எந்த ஜனநாயக நாட்டிலும் இல்லாத வழக்கம்'' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

காங்கிரசுக்கு சாவுக்குழி தோண்டிய திருவாங்கூருக்கு ஏனிந்த ஆலோசகர்நியமனமோ தெரியவில்லை! மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபை இருக்கிறது — சர்க்கார் காரியங்களை நடத்தபோகிறது. இந்நிலையில் ஏன், இந்த ஆலோசகரை நியமிக்க வேண்டும்? டில்லியின் பொம்மையாக இருக்கவா? விசித்திரமான நியமனம் இது!!

❀

## கோவை ஆரம்ப ஆசிரியர் மாநாடு

கோவை மாவட்ட ஆரம்ப ஆசிரியர்களனைவரும் ஒன்று சேர்ந்து தமது கோரிக்கைகளுக்காகப்போராடவேண்டுமென்றும் இந்த நோக்கத்துடன் வரும் ஏப்ரலில் மாவட்ட மாநாடு ஒன்று நடத்த இருப்பதாகவும் அதற்கு எல்லா ஆசிரியர்களின் தொடர்பும் வேண்டப்படுவதாகவும் மேற்படி மாநாட்டு அமைப்பாளர்களான அ. சீனிவாசன், சி. வேலுசாமி தெரிவிக்கின்றனர்.

தயாராகிறது!

மு. கருணாநிதியின்

விடுதலைக்கிளர்ச்சி

திராவிடப்பண்ணை

தெப்பகுளம் :: திருச்சி.



ஏஜண்டுகள் தேவை. மானேஜர் "களஞ்சியம்" 38, செவிடட மேஸ் ரோடு, சென்னை 18

# ★ நாக நாடு ★

"நரமாமிசம் படைப்போர்! மனிதர்களைப் பலியிடுவோர்! காட்டுமிராண்டிகள்! நாகரீகமில்லாதவர்கள்! மண்டையோடுகளுக்கு பூஜை செய்யும் மனோபாவம் படைத்தவர்கள்!" என்றெல்லாம், பேசப்பட்ட நாகர்கள் தனிநாடு கேட்கிறார்களாம்.

அஸ்ஸாம் மாகாணத்தைச் சேர்ந்த நாகமலைகளில் வசிக்கும், இரண்டு லட்சம்பேர், தமக்கோர் நாடு, வேண்டுமென்கிறார்கள்.

நாகமலைக் குன்றுகள், நாகரீக ஒளி, பரவாத இடமாகும். அங்கே வாழும் மலைசாதி மக்கள் இவர்கள். வனமிருகங்களோடு எதிர்த்துப் போராடிக்கொண்டு, காட்டுக்குள் குடிசைகள் அமைத்து, மலைக் குன்றுகளைத்தாவி, மேடும்பள்ளமும் கடந்து, இருட்டிலே அலையும், மலைசாதிமக்கள், தமக்கோர் தனிநாடு கேட்கிறார்கள்.

கடந்தவாரம், நாகமக்களின் தலைவர் பிஜோ, இந்தியப் பிரதமர் பண்டித நேருவைச் சந்தித்து, நாகநாடு வேண்டுமென்று, வலியுறுத்தியிருக்கிறார். அவர்தம் கோரிக்கைக்கு நேரு, மறுத்து, பதில் தந்திருக்கிறார் — 'கொஞ்சம்பேர் நீங்கள். தனியாக வாழமுடியாது' என்று. தாமே நீதிபதியாக, அமர்ந்து தீர்ப்பு தந்திருக்கிறார்.

இந்தப் பதிலைக்கேட்ட நாகர்கள் தலைவர், சோர்ந்துபோய்விடவில்லை. 'நாகநாடு பெற்றே தீருவோம்' என்று முழக்கமிட்டிருக்கிறார். காந்தியார் விட்டுச்சென்ற பாதை தெரியும் எங்களுக்கு—சாத்வீகப்போராட்டம்—அதை மேற்கொள்வோம், இந்த சர்க்காரின சட்டங்களைமறுப்போம், சத்யாக்கிரகங்கள் செய்வோம்—என்று தணியாத விடுதலை வேட்கையோடு, பிஜோ அறிவித்திருக்கிறார்.

'குண்டுகள் எம்மைத் துளைத்தாலும், துப்பாக்கிகள் சுட்டாலும்—அதைத்தாங்கும் சக்தியும் உண்டு எமக்கு. தயங்கோம், இவைகளைத் தாங்க' என்றும் பிரகடனப்படுத்திருக்கிறார், பிஜோ.

நாகநாடு—கேட்பவர்கள் இரண்டு லட்சம்பேர் — அதுவும் மலை ஜாதி மக்கள்—நாகரீகமில்லாதவர்களென நையாண்டி செய்யப்படுபவர்கள் — அவர்கள் கேட்கிறார்கள் தனிநாடு. அதை பெற்றுத்தீரவேண்டுமெனப் போராடத் துவங்கியிருக்கிறார்கள். தமக்கோர் நாடு தேவை என்கிற, முழக்கத்தைக் காட்டி, அண்மையில் நடைபெற்ற இந்தியப்பொதுத் தேர்தலை பகிஷ்கரித்திருக்கிறார்கள் தமது மக்களில் எவரையும்அனுப்பவில்லை, பாராளுமன்றத்துக்கு தமது உரிமைக்குரலை, இவ்விதம், உலகுக்கு உணர்த்தியிருக்கிறார்கள்.

அவர்கள் மலைஜாதி மக்கள்—நாகரீகமில்லாதவர்கள் — அங்கே ஒரு பிஜோ — உலகங்களைச் சுட்டிக்காட்டி, விடுதலை முழக்கமிடுகிறார்—அவர் காட்டிய பாதையிலே செல்ல காத்துக்கிடக்கிறார்கள், நாகமக்கள். இரண்டு லட்சம் தொகையினர்! எனினும் தனிநாடு கேட்கிறார்கள்.

அறியாமை இருளுக்குள் கிடத்தப்பட்டிருக்கும், மலைநாட்டுமக்கள் இன்று விடுதலைகீதம் பாடுகிறார்கள் — டில்லியின் பிடிப்பிலிருந்துவிடுபடவேண்டுமென விரும்புகிறார்கள் இயற்கையின் தொட்டில்போல், மேடு பள்ளமும், அடர்ந்த மரங்களும், உயர்ந்த சரிவுகளும், பாயும் மிருகங்களும், ஓடும் சிற்றாறுகளும் நிரம்பிய தமது இருப்பிடம் தனியாகவேண்டும் — தாமே நிர்வாகம் நடத்த வேண்டும் எனத் துடிக்கிறார்கள்.

ஆனால் நம்மவர்! பண்டைப்பெருமைகள்பற்றி பலப்பல பேசுவர். எகிப்துநாட்டு எழிலரசி கிளியோபாத்ரா காலத்தில், எமது பூமியிலிருந்து முத்துக்கள் விற்பனையாயிற்று என்று பேசும் திறன்படைத்தோர் உண்டு — ரோமாபுரியும் ஏதன்சும் எழிலோச்சிய நாட்களில் சிங்காரத்தோடிருந்தது தெரியுமோ எமது நாடு — என்று செப்புவர், பெருமையோடு. எலிமயிராடை!—எமது நாட்டியிலிருந்து அனுப்பப்பட்ட ஆடையின் பெயர் இது, என்பர். கோட்டைகளைக் காட்டுவர்—குழிந்துகிடக்கும்அகழ்களைச் சொல்வர்; கோயில்களைப்பற்றிக் கூறுவர் —அது கட்டப்பட்ட காலத்தைப் பற்றி வர்ணிப்பர். உலகத்துக்கே நாகரீகம் சொல்லித்தந்தது தென்பாகம்தான்—முப்பக்கமும் அலைகள் தழுவிக்கிடக்கும் இதுதான் நாகரீகம் வளர்த்த தொட்டில் திரைகள் முத்தமிட்ட இடம்' திரை — இடம்–திராவிடம் என்று, அமுதத் தமிழில், காரணங்காட்டி விளக்கும் பண்டிதமணிகளும், அவர்தம் விளக்கவுரைகேட்டு 'ஆகா!' என்று வியந்து, 'பிரசங்கம் பிரமாதம்' என்று கூறும் பெம்மான்களுமிருக்கிறார்கள். ஆனால், நாம் தனிநாடு கேட்பதுபற்றி— சிந்திப்பதுமில்லை; நினைப்பதுமில்லை, அவர்கள். சோபாவிலே அமர்ந்தபடி 'எப்படி சார்?' என்பதும், கதராடை அணிந்து கொண்டு "ஏன் இது?" என்றும், "ஏதோ பேசுகிறார்கள்!" என்ற பாராமுகத்தோடு பலரும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்திய உபகண்டத்தின் வடகிழக்கெல்லையைக் காட்டவிரும்புகிறோம் – பாருங்கள் நண்பர்களே பாருங்கள்! நாகநாடு—கேட்கிறார்கள் நாகர்கள்!! நாகரீகமற்றோர் என்று கேலி செய்யப்பட்ட நாகர்களிடையே ஒரு பிஜோ தோன்றினார் — விடுதலை தாகம் பிறந்துவிட்டது. ஏடுகளைக் காட்டி பழம்புகழ் பாட முடியாதவர்கள், அவர்கள். காட்டிலே உலவியோர்! இன்று நாடு கேட்கிறார்கள்—தனிநாடு!! டில்லியின் தொடர்பு கத்தரிக்கப்பட்டு—அஸ்ஸாம் மாகாணத்திலிருந்து விடுபட்டு—தமது நாகக் குன்றுகள் தனிநாடாக வேண்டுமெனக்கூறுகிறார்கள். அவர்களுக்கு சரித ஆதாரங்கள் கிடையாது! பண்டைப்பெருமைகள்பற்றி பேசமுடியாதவர்கள்! இப்போதுதான் நாகரீக ஒளிபெற்று வருபவர்கள்! அவர்கள், எழுப்புகிறார்கள், உரிமை முழக்கம்!! நாகரீகஒளி சிதறத் துவங்கி, உலகைப்பற்றி உணரத் துவங்கியதும், அவர்கள் உள்ளங்களிலே 'அடிமை விலங்கு' தென்பட்டிருக்கிறது — அது உடைத்தெரியப்படவேண்டுமென கர்ஜிக்கிறார்கள்—பிஜோ தலைமையில்.

பிறருக்கேன் ஆட்பட்டிருக்க வேண்டும்? — இந்த ஒரு ஆத்திரம் தான் அவர்களை விடுதலைப்போராட்டத்தில், குதிக்கச் செய்திருக்கிறது.